வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 161/2022

வழக்கு சாட்சி LW6/PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கமல் | ஜாதி | |
| கணவர்/தந்தை | செல்லன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 41 |

தேதி 05.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூரில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பமானது அ.த.சா.ஆ. 5,6 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. 26.11.2022 அன்று நானும் எனது நண்பர் லோகுதாஸ்வும் டீ குடிப்பதற்காக மஞ்சம்பாக்கம் அம்மா உணவகம் அருகே உள்ள டீக் கடைக்கு டீ சாப்பிடச் சென்றோம். அப்போது கூட்டமாக இருந்தது என்னவென்றுக் கேட்டபோது போலீசார் சாட்சிக் கையொப்பம் செய்ய சொன்னார்கள். ஆஜர் எதிரியை தான் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அவரிடம் இருந்து ஏதும் எடுத்தார்களா என்றால் அது எனக்குத் தெரியாது. வண்டியில் இருந்து ஏதோ எடுத்துக் கொடுத்தார்.

**குறுக்கு விசாரணை**

அம்மன் கோவில், பெருமாள் கோவில் ஒரே காம்பௌன்டில் தான் உள்ளது என்றால் ஆமாம். நான் அந்த அம்மன் கோவிலில் நான் நிர்வாகி என்றால் ஆமாம். அந்த அம்மன் கோவிலில் தான் திருடுப்போனது என்றால் ஆமாம். மற்ற பட்டியல் சாட்சிகள் பெருமாள் கோவில் நிர்வாகிகள் என்றால் ஆமாம். திருடுப்போனது எப்போது தெரியும் என்றால் மறுநாள் காலைத் தெரியும். நான் கையெழுத்து காவல் நிலையத்தில் எப்போது செய்தேன் என்றால் காவல் நிலையத்தில் செய்யவில்லை. நான் காவல் நிலையத்திற்கு மற்ற சாட்சிகளுடன் தான் புகார் அளிக்க சென்றேன் என்றால் ஆமாம். நான் கையொப்பம் எந்த தாளில் செய்தேன் என்றால் அது தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த்தாக சொல்லும் இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து

கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எந்த பொருளையும் எடுத்துக் கொடுத்ததை பார்க்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**